**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் – 197/2013**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 முத்துசாமி –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 24.02.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி. நான் எனக்காக மட்டும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டுதான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தெரிந்து கொண்டுதான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் பெருமாள் கவுண்டர். எனது தாயார் பெயர் பெருமாயி. ராசு (எ) ஆண்டியப்பன், சீரங்காயி, பழனியப்பன், சின்னம்மாள், முத்துச்சாமி மற்றும் மாணிக்கம் ஆகியோர் எனது பெற்றோருக்கு வாரிசுகள் என்றால் சரிதான். எனது சகோதரிகள் இருவரையும் சொக்கன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தோமா என்றால் இல்லை, அரசப்பன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தோம். இவ்வழக்கின் 3ம் பிரதிவாதி எனது சகோதரியின் மகன் என்றால் சரிதான். எனது சகோதரி சின்னம்மாளின் மகள் பெயர் சரோஜா என்றால் சரிதான், அவர் இறந்து விட்டார்.

2) சரோஜாவின் குழந்தைகள்தான் 4, 5 பிரதிவாதிகள் என்றால் சரிதான். எனது மனைவி பெயர் ராசம்மாள் என்றால் சரிதான். எனது மகள்கள் தனலெட்சுமி, கீதா இருவரையும் 3ம் பிரதிவாதி சுப்பிரமணிக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் சொத்துககளை நானும், எனது சகோதரர்கள் ராசு (எ) ஆண்டியப்பன், பழனியப்பன், மாணிக்கம் ஆகியோர் பாகம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி பாகம் வாய்மொழியாக ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகம் 1966ம் வருடம் நடைபெற்றது என்றால் சரிதான். பாகம் பிரித்த பின்பு எனது அண்ணன் ராசு (எ) ஆண்டியப்பன், பழனியப்பன் இருவரும் தனியாக சென்றுவிட்டனர் என்றால் சரிதான். பின்னிட்டு நானும், எனது தம்பி மாணிக்கமும் ஒன்றாக இருந்தோம் என்றால், சுமார் 10

வருடங்கள் ஒன்றாக இருந்தோம்.

3) பாகம் பிரித்த காலகட்டத்தில் எனது தம்பி மாணிக்கத்திற்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். மூத்தவர் என்ற முறையில் நான்தான் குடும்ப பொறுப்புகளை கவனித்தேன் என்றால் சரிதான். எனது சகோதரிகளின் கணவர் அரசப்பன் இறந்த பின்னிட்டு, எனது சகோதரிகள் இருவரும் எங்களுடன் வசித்தனர் என்றால், கொஞ்ச நாட்கள் இருந்தார்கள், பிறகு சென்றுவிட்டார்கள். நான், எனது தம்பி மாணிக்கம், சகோதரிகள் சீரங்காயி, சின்னம்மாள் அனைவரும் ஒரே குடும்பமாக வசித்தோம் என்றால் இருந்தோம். எனக்கு பிரிந்த பாகம் மற்றும் மாணிக்கத்திற்கு பிரிந்த பாகம் இரண்டையும் ஒன்றாக வைத்து நான் தம்பி மாணிக்கம், சகோதரிகள் சீரங்காயி, சின்னம்மாள் அனைவரும் ஒன்றாக பாடுபட்டோம் என்றால் சரிதான்.

4) அவ்வாறு ஒன்றாக பாடுபட்ட வருமானத்தை வைத்துதான் 04.07.1975ம் தேதியில் 5 ஏக்கர் 5 செண்ட் நிலத்தை கிரையம் வாங்கினோம் என்றால் சரியல்ல, நான் தனியாக வாங்கினேன். அவ்வாறு நான் கிரையம் வாங்க என்னிடம் தனியாக பணம் இருந்தது என்பதைக் காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கடன் வாங்கி வாங்கினேன். நான் மேற்படி தொகையை கடன் வாங்கியதாக எனது சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 1976ம் வருடம் எனது தம்பி மாணிக்கத்திற்கு திருமணம் செய்தேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னிட்டு எனது தம்பி மாணிக்கம் தனியாக சென்றுவிட்டார் என்றால், சிறிது நாட்கள் கழித்து சென்றுவிட்டார். நான் கிரையம் வாங்கிய கிரைய ஆவணத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5) நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு ஆரம்பத்தில் என் பெயரில் தனிப்பட்டா ஏற்படவில்லை என்றால் சரியல்ல, தனிப்பட்டா உண்டு. மேற்படி தனிப்பட்டாவை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கயி 5 ஏக்கர் 5 செண்ட் நிலத்தை 1981ல் நான், எனது தம்பி, எனது சகோதரிகள் சீரங்காயி, சின்னம்மாள் ஆகியோர் பாகம் பிரித்துக் கொண்டோம்

என்றால் சரியல்ல. அதன்படி எனக்கு 1 ஏக்கர் 65 செண்ட், எனது தம்பிக்கு 1 ஏக்கர் 65 செண்ட், எனது சகோதரிகள் இருவருக்கும் சேர்த்து 1 ஏக்கர் 65 செண்ட் பிரித்துக் கொண்டோம் என்றால் சரியல்ல. எங்கள் பூர்வீக சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டதில் எனது தம்பி மாணிக்கத்திற்கு பட்டா எண் 1612, 3173 ஏற்பட்டது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு என் தம்பி மாணிக்கத்தின் பெயரில் பட்டா எண் 1629 ல் 68 ஏர்ஸ் நிலத்திற்கு பட்டா உள்ளது என்றால், 7 நபர்கள் பெயரில் ஏற்பட்டுள்ளது. எவ்வாறு ஏற்பட்டது என தெரியாது.

6) 7 நபர்கள் யார், யார் என்றால் அதுபற்றி தெரியாது. பட்டா ஏற்பட்டதாக மட்டும் சொன்னார்கள். நான் கிரையம் வாங்கிய சொத்தில் ஒரு பகுதிக்கு என் பெயரில் பட்டா எண் 1800 ஏற்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. எனது சகோதரிகளுக்கு எனது கிரைய சொத்தில் பிரிந்த பாகத்திற்கு பட்டா ஏற்பட்டு, அவர்கள் மகன் சுப்பிரமணி பெயரில் பட்டா எண் 792 உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. மாணிக்கம் நான் கிரையம் வாங்கிய சொத்தில் பிரிந்த தனது பாகத்திற்கு 2013 வரை வரி செலுத்தி வருகிறார் என்றால், யாரும் வரி செலுத்துவதில்லை. நான் வரி செலுத்தினேனா என்றால் இல்லை. பட்டா எண் 792 ற்கு சுப்பிரமணி வரி செலுத்தியுள்ளார் என்றால் அதுபற்றி தெரியவில்லை. பட்டா எண் 1629 ல் கண்ட சொத்தை எனது தம்பி மாணிக்கம் அனுபவித்து வந்து, பின்னர் 06.02.2013 ம் தேதியில் வாதிக்கு தான செட்டில்மென்ட் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

7) 06.02.2013 ம் தேதி முதல் தாவா சொத்தை வாதிதான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதியின் தான செட்டில்மென்ட் ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி தேதியிலேயே வாதிக்கு எனது தம்பி தாவா சொத்தை சுவாதீனம் செய்து கொடுத்துவிட்டார் என்றும், அந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் பற்றி இவ்வழக்கு தாக்கல் செய்த போது தெரியும் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் செல்லாது என தற்போதுவரை எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், தாவா சொத்து எனது சுவாதீனத்தில் இருப்பதால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான்

இவ்வழக்கின் தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என எதிர் கோரிக்கை எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக எனது தம்பியிடம் இருந்தோ, வாதியிடம் இருந்தோ சட்டப்படியாக சுவாதீனம் கேட்டு வாங்கவில்லை என்றால் சரிதான்.

8) தாவா சொத்து எனது சுவாதீனத்தில் உள்ளது என காட்ட அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் நான் சொல்லித்தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது சாட்சிய பிரமாணத்தில் 4ம் பக்கத்தில் 04.07.1995ல் கிரைய பத்திரத்தில் கண்ட சொத்துக்களை பிரித்து பாகப்பிரிவினை செய்து கொள்ளலாம் என நான் எப்போதும் ஒப்புக் கொள்ளவில்லை என கண்டுள்ளது என்றால் சரிதான். 04.07.1995ம் தேதியிட்ட பத்திரம் எது என்றோ, அதில் கண்ட சொத்து எது என்றோ தெரியுமா என்றால் தெரியாது. பூர்வீக சொத்து பாகம் பிரிக்கப்பட்டது சம்பந்தமாக எங்களுக்குள் எந்த பிரச்சினையும் இல்லை என்றால் சரிதான். பூர்வீக சொத்து குறித்து வாதி இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். வாதி வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் தாவா சொத்து பாத்தியம் என இவ்வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

9) எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது சகோதரர்களுக்கு பிரிந்த பாகத்திற்கு அவர்களது பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது சகோதரர்கள் பெயரில் தனியாக பட்டா ஏற்பட்ட சொத்துக்களுக்கு எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். எனது சகோதரர் பெயரில் தனியாக பட்டா ஏற்பட்டு அவர்கள் அனுபவம் செய்து வரும் சொத்தில் நான் எந்த உரிமையும் கேட்கவில்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலம் பக்கம் 6ல் 06.11.1996ல் என் பெயரில் கிரையம் ஏற்பட்டு எனது தனிச் சொத்தாக அனுபவம் செய்து வருகிறேன் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 24.11.1997ல் சர்வே எண் 655/1E, 655/1F ஆகியவற்றை எனது சகோதரர்களிடம் இருந்து நான் கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்துக்களுக்கும், தாவா சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால்

சரிதான். 04.04.2022 ல் என் சகோரரர் ஆண்டியப்பனிடம் இருந்து சர்வே எண் 658/5A ல் கிரையம் வாங்கியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது இவ்வழக்கிற்கு சம்பந்தப்படாதது என்றால் சரிதான்.

10) குளித்தலை வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்து பட்டாவில் சில பெயர்கள் தவறாக சேர்க்கப்பட்டுள்ளது என கொடுத்த மனுவில் எனக்கு சாதகமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உத்தரவை எதிர்த்து எனது தம்பி மாணிக்கம் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்தார் என்றால் சரிதான். மேல்முறையீடு நிலுவையில் இருப்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டை எதிர்த்து எனது தம்பி மாணிக்கம் மதுரை உயர்நீதிமன்றத்தில் WP NO 13983/2018 என்ற மனு தாக்கல் செய்து, அதில் இந்த வழக்கில் தீர்வு காணும்படி அறிவுறுத்தப்பட்டது என்றால் சரிதான்.

11) இவ்வழக்கிற்கு பின்னிட்டு தாவா சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்பதற்கான அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், எனது அனுபவத்தில்தான் உள்ளது. வாதி பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மென்ட் ஆவணத்தை எதிர்த்து நான் தனியாக எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்காததால் நான் இவ்வழக்கில் எதிர்வாதம் செய்ய இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், நான் பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றும், எனவே வாதி கோரியுள்ளபடி தாவா தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**